# ★ யாழ்.குடாவை தாக்க ராணுவம் மீண்டும் முஸ்தீபு

பொதுசன நூலகம்
மாநகராட்சி மன்று
11-10-1993
யாழ்ப்பாணம்

விலை ரூபா 5-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 35 திருவள்ளுவர் ஆண்டு 2024 புரட்டாதி 25 இதழ் 236
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 11– 10 – 1993

(கொழும்பு)
யாழ் குடாநாட்டின் மீது படையினர் மீண்டும் ஒரு பாரிய தாக்குதலை நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் நடைபெற்று வருவதாகக் கொழும்புச் செய்திகள் கூறுகின்றன.

இத்தாக்குதலுக்கென, ஏற்கனவே 'ஒபரேஷன் யாழ் தேவி' இராணுவ நடவடிக்கைக்கு வரவழைக்கப்பட்ட 20,000 படையினரும் பெருமளவினர் பயன்படுத்தப்படலாம் எனவும் எதிர்பார்க்கப்

(4-ம் பக்கம் பார்க்க)

## 58 தமிழ் இளைஞர் கொழும்பில் கைது

(கொழும்பு)
கொழும்பு முகத்துவாரத்தில் நடந்த வியாழக்கிழமை கண்டுபிடிக்கப்பட்ட வெடிகுண்டு தொடர்பாக இதுவரை 58 தமிழ் இளைஞர்கள் பொலிசாரால் கைதுசெய்யப்பட்டுள் என [illegible] தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ள உயர் அரச அதிகாரிகள் அல்லது பாதுகாப்புத்துறை அதிகாரிகளை கொலை செய்வதற்கு இந்த வெடிகுண்டு தயாரிக்கப்பட்டதென்று பொலிசார் சந்தேகிப்பதாக ஏஜென்சி செய்திகள் தெரிவிக்கின்றன.

(4ம் பக்கம் பார்க்க)

● தமிழக மீனவர் கொலையின் எதிரொலி

# இல.படையை கட்டுப்படுத்துக இந்தியா கடும் எச்சரிக்கை

## விசாரணை நடத்த கோருகிறது

(கொழும்பு)
தமிழக மீனவர்கள் நேற்று முன்தினம் இலங்கைப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் இந்திய கடல் எல்லையுள் நிகழ்ந்துள்ளதல் இலங்கை தனது படையினரை கட்டுப்பாட்டினுள் வைத்திருக்க வேண்டுமென இலங்கை அரசை இந்தியா கடுமையாக எச்சரித்துள்ளது.

மேற்படி சம்பவம் குறித்து சனத்துடன் நேற்று தொடர்பு இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் திரு. நரேஷ்வர் தயாள் இலங்கை வெளியுறவு அமைச்சு திரு. நரேஷ்வர் தயாள் கொண்டு இவ்எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

தனதுகண்டனத்தில், இலங்கை அரசு இப்படுகொலை பற்றி விசாரணை மேற்கொள்வதுடன்

(4-ம் பக்கம் பார்க்க)

## மத்திய அரசு மீது 'ஜெ' குற்றச்சாட்டு

(சென்னை)
தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கச் செல்லும்போது இலங்கைக் கடற்படையினரால் தாக்கப்பட்டு கொல்லப்படுவதைத் தடுக்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்கத் தவறிவிட்டது என்று தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா மத்திய அரசைக் குற்றம் சாட்டியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கை கடற்படை அத்துமீறி ஆக்கிரமிப்பு

(சென்னை)
இலங்கை கடற்படை அத்துமீறி ஆக்கிரமிப்பு செய்வதை நிறுத்த வேண்டுமென இலங்கை அரசிடம் இந்திய அரசு உடனடியாக வற்புறுத்துவதுடன் பேச்சு நடாத்தி தீர்வுகாண வேண்டும்.

இவ்வாறு இந்திய மத்திய கம்யூனிஸ்ட் கட்சியின் தமிழ் மாநிலக்குழு தமிழக மீனவர்

(4-ம் பக்கம் பார்க்க)

## இலங்கைப் படையினர் மீது இந்தியப் படை தாக்கலாம்?

(கொழும்பு)
தமிழக மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் தொடர்ந்தும் கடும் தாக்குதலையெனப் பி. பி. ஸி. தெரிவித்தால் நடாத்தி வருகின்றமை இலங்கை - இந்திய உறவில் பெரும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது:

இத்தாக்குதல்கள் பற்றி இலங்கைக்கு இந்தியா பல

(4-ம் பக்கம் பார்க்க)

## இல.-இந்திய கடல் எல்லையில் புலிகள் நடமாட்டம் அதிகரிப்பு

(சென்னை)
இலங்கை-இந்தியக் கடல் எல்லைப் பகுதியில் விடுதலைப் புலிகளின் நடமாட்டம் மீண்டும் அதிகரித்திருப்பதால் பிரச்சினை சிக்கலாகியுள்ளது. புலிகளின் நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என பாரதீய ஜனதாக் கட்சியின் தமிழ்நாடு பிரிவு கோரியுள்ளது.

இராமேஸ்வரம் மீனவர்கள் இலங்கைப் படையினரால்

(4-ம்பக்கம் பார்க்க)

## மாதகல் கடலில் கடும் மோதல்?

(கொழும்பு)
மாதகலுக்கு வடக்கே கடற்பிராந்தியத்தில் விடுதலைப் புலிகளுக்கும் கடற்படையினருக்கும் இடையில் கடும்மோதல் இடம்பெற்றுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்று தெரிவித்தன.

அவ்வட்டாரங்கள் மேலும் தெரிவிக்கையில்: 3படகுகளில் சென்ற விடுதலைப் புலிகள்

(4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி கரையோரத்தில் நேற்றிரவு 'ஹெலி' தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
இளாலி கரையோரப்பகுதியில் நேற்றிரவு 7-20 மணியளவில் ஹெலிகொப்டர் ஒன்று கவியல் தாக்குதலை நடாத்தியுள்ளது.

ஹெலிகொப்டரிலிருந்து மேற்கொள்ளப்பட்ட சடுதியான இத்தாக்குதலையடுத்து கொழும்பு மற்றும் பல்வேறு இடங்களுக்கு செல்வதற்கான இளாலிப்பகுதியில் திரண்டி

(4-ம் பக்கம் பார்க்க)

## அநுராதபுரத்தில் இராணுவத் தளபதி

(கொழும்பு)
இலங்கை இராணுவத்தின் 44-வது ஆண்டு நிறைவை யொட்டி அநுராதபுரத்தில் நேற்று நடைபெற்ற வைபவங்களில் இராணுவ தளபதி சிசில் வைத்தியரத்ன கலந்து கொண்டார்.

இவ்வைபவங்களில் பல படைத்தளபதிகளும் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இத்தினத்தையொட்டி நேற்று பலாலி இராணுவ முகாமிலும் பல வைபவங்கள் இடம் பெற்றதாகவும் தெரிய வருகிறது. (சி)

## இளாலி மிதிவெடியில் மூவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)
இளாவிடத்தரையில் நேற்று பிற்பகல் 3-30 மணியளவில் சாமான் இறக்கும் வேலைக்குச் சென்ற மூவர் கரையிலிருந்த மிதிவெடியில் சிக்கி படுகாயமடைந்தனர்.

இவ்வாறு மிதிவெடியில் சிக்கிய சண்முகராசா கனகராசா

(4-ம் பக்கம் பார்க்க)

## இளாலி—பூநகரி படகுச் சேவை

(யாழ்ப்பாணம்)
இளாலி — பூநகரி படகுச் சேவை இன்று வழமையான நேரத்திற்கு நடைபெறும் என விடுதலைப் புலிகள் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## காமினி கட்சிக்கு ஐ. தே. க.வுடன் உடன்பாடு இல்லை

(கொழும்பு)
ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி, ஐக்கிய தேசியக் கட்சியுடனோ அல்லது ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியுடனோ எதுவித ஒப்பந்தமும் செய்யவில்லை என்று ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணித் தலைவர் திரு. காமினி திசநாயக்கா

(4ம் பக்கம் பார்க்க)

[illegible]

**தாரணி**
**(கேள்வி பதில் சஞ்சிகை)**

சோதிடம், மருத்துவம், குடும்ப, சந்தோச பிரச்சினைகள், அறிவியல், இலக்கியம் சம்பந்தமான கேள்விகளை அஞ்சலட்டையில் அனுப்பலாம், பதிலளிக்கப்படும்:- தாரணி, 55, யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். (ஏ-3484)

**நாளை (12 - 10 - 93)**
**வியாழ மாற்றம்**

15-10-93 சனிவக்கிர மாற்றம் என்ற ஜோதிடமும் வெளிவந்தது. ரூ. 10/- எங்கும் விற்பனையாகின்றது. கிருஷ்ண சாமி புத்தகசாலை, யாழ்ப்பாணம். (நூலாசிரியர்: சத்தா) (இ-512)

## விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி

(வட்டுக்கோட்டை)

தமிழீழ கல்வி மேம்பாட்டுக் கழகத்தினால் நடாத்தப்பட்ட க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கான முன்னோடித் தேர்வு விடைத்தாள் மதிப்பீட்டுப்பணி இம்மாதம் 14ம் திகதி முதல் 21ம் திகதிவரை நடைபெறவுள்ளது. -139

## மண்ணெண்ணை விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பலநோக்கு கூட்டுறவுச் சங்கம் பாவனையாளர்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு ஒன்றரை லீற்றர் மண்ணெண்ணையை லீற்றர் 25 ரூபா வீதம் விநியோகம் செய்து வருகின்றது. (72)

## ரயில்வே ஊழியர் சம்பளம் வழங்கப்பட்டது

(அரியாலை)

யாழ் மாவட்ட ரயில்வே சேவை ஊழியர்களின் சம்பளம் கடந்த 9ம் திகதி யாழ். ரயில்வே பகுதி மேற்பார்வை உத்தியோகத்தரின் இல்லத்தில் வைத்து வழங்கப்பட்டது. -59

## இலவச வகுப்பு

(கொழும்புத்துறை)

யாழ். மாவட்ட இந்து இளைஞர் பேரவையின் 'தர்ம சேவை' நிலையத்தின் சார்பில் பின்வரும் இலவச வகுப்புகள் நடாத்தப்படவுள்ளது

சைவசமயம், தமிழ், பண்ணிசை, சங்கீதம் ஆகிய வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

நல்லூர் சிவன்கோவிலுக்கு முன்பாக உள்ள தர்மசேவை நிலையத்தில் மேலதிக விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. -154

## சடலம் ஒப்படைப்பு

(யாழ்ப்பாணம்)

கிருமிநாசினி அருந்தி தற்கொலை செய்து கொண்டதாக ஒருவரின் சடலம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

அளவெட்டியில் நேற்று இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்ட இச்சம்பவத்தில் அவ்விடத்தைச் சேர்ந்த முடியப்பு றொபின்சன் (வயது30) என்பவரே சடலமாக ஒப்படைக்கப்பட்டவராவர். சடலம் பிரேத பரிசோதனைக்காகவும் மரண விசாரணைக்காகவும் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (9)

# செய்திச் சரம்

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(பண்டத்தரிப்பு)

யாழ் மாவட்டத்திலுள்ள கிராமிய சுகாதார உதவியாளர்களுக்கு ஆர். ஏச். ஏ.) இறுவர் பாதுகாப்பு நிதியத்தின் அனுசரணையுடன் சேவைக் காலப் பயிற்சி வகுப்புக்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன. இதற்கான ஒழுங்குகளை, யாழ். பிரதேச சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் பணிமனை மேற்கொண்டு வருகின்றது. -72

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கேள்வி அறிவித்தல்

1. பின்வருவனவற்றிற்கு கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.
   (a) யாழ்ப்பாணப் பல்கலைக்கழக துணைவேந்தரின் உபயோகத்திற்காக வாடகைக்கு டீசலில் இயங்கும் ஒரு மோட்டார் கார்.
   (b) யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினால் கொள்வனவு செய்வதற்கு டீசலில் இயங்கும் பாவித்த ஒரு மோட்டார் கார்.
2. கேள்விதாரர்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிதியாளரிடமிருந்து பெறப்பட்ட (ஒவ்வொரு கேள்விப் பத்திரத்துக்கும்) மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரக் கட்டணமாக ரூபா 200/- செலுத்தியதற்கான பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேலைகள் எந்திரிகளிடமிருந்து கேள்விப் பத்திரங்களை 19-10-93 வரை பெற்றுக்கொள்ளலாம்.
3. கேள்விப்பத்திரங்களை கட்டணமெதுவுமின்றி யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திட்டமிடல் கிளையில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.
4. பூரணப்படுத்தப்பட்ட கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளரிடம் 22-10-93 காலை 10-00 மணிக்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.
5. எந்தக் கேள்விப் பத்திரத்தையும் நிராகரிக்கும் உரிமை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கேள்விச் சபைக்கு உண்டு.

பதிவாளர்.

த. பெ. இலக்கம் 57,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.

(ஏ-3486)

## நடமாடும் வைத்திய சேவை

(கொழும்புத்துறை)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையினர் யாழ் மாவட்டத்தில் நடமாடும் வைத்திய சேவையை விரிவுபடுத்தியுள்ளனர்.

மக்களின் நலன் கருதி, இந்த நடமாடும் வைத்திய சேவைப் பிரிவினர் யாழ் மாவட்டத்தில் உள்ள அகதி முகாம்களுக்குச் சென்று வைத்திய சேவையை அளித்துவருகின்றனர். (154)

## சிறுதானியங்கள் உற்பத்தி

(மன்னார்)

மன்னார் மாவட்டத்திலுள்ள பெரிய பண்டிவிரிச்சான் கிராமத்தில் உள்ள தரிசு நிலங்களை பயன்படுத்தி கிராமவாசிகள் சிறுதானியங்களை உற்பத்தி செய்து வருவதாக தெரிவிக்கின்றது. பயறு, உழுந்து, நிலக்கடலை முதலியவற்றிற்கும் மன்னாரில் நல்ல கிராக்கி ஏற்பட்டுள்ளது -59

## வெடிக்காத குண்டு

(ஆனைப்பந்தி)

கடந்த வாரம் கிளாலிப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையின்போது சிறிலங்கா வான் படையால் ஏவப்பட்ட ரொக்கற் குண்டொன்று கெற்பலி பண்டிதர்குடியிருப்பில் வெடிக்காத நிலையில் புதைந்து கிடக்கின்றது. (101)

## பிரியாவிடை வைபவம்

(திருநெல்வேலி)

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் முன்னாள் அதிபர் கலாநிதி சு. ஜெபநேசனுக்கு அண்மையில் பிரியாவிடை வைபவம் நடைபெற்றது.

தென்னிந்திய திருச்சபையின் புதிய பேராயராகத் தெரிவு செய்யப்பட்ட முன்னாள் அதிபருக்கே இப்பிரியாவிடை வைபவம் நடைபெற்றது. (157)

## தையல் பயிற்சி நிலையம்

(அரியாலை)

தென்னிந்தியத் திருச்சபையின் யாழ். பேராயம், யாழ். ஆஸ்பத்திரி வீதியில் தையல் பயிற்சிநிலையம் ஒன்றை நிறுவியுள்ளது -59

## நல்லின பசுக்கள் வழங்கப்பட்டது

(உடுவில்)

கிராமிய மேம்பாட்டுத் திட்டத்தின் அடிப்படையில் வலிகாமம் கோட்டத்தில் கிராம வேலைத் திட்டங்களை ரம்பிக்கும் பணி ஆரம்பமாகியுள்ளது.

இதன் முதற் கட்டமாக மானிப்பாய் வடக்குப் பகுதியில் உள்ள திருமதி முருகேசு நாகம்மா, திருமதி ஆறுமுகம் தங்கம், திரு கனகராசா செல்வரத்தினம், திருமதி கணேசு விஜயராணி, திருமதி சுப்பிரமணியம் செல்லையா, திரு.மா. இராசரத்தினம் ஆகியோருக்கு நல்லினப் பசுக்கள் வழங்கப்பட்டன. (109)

## அகதி முகாமில் கண்நோய்

(கொழும்புத்துறை)

யாழ். புனித ரத நிலைகளில் முகாமில் தற்போது கண்நோய் வேகமாகப்பரவி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (154)

## ப. நோ. கூ, ச. புதிய கிளை

(மானிப்பாய்)

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம் மாணவர் மதிய உணவு முத்திரைக்கு பொருட்களை வழங்குவதற்கென யாழ் நகரில் மானிப்பாய் வீதியில் விசேட கிளையொன்றினை திறந்துள்ளது. -71

# 'தொழிலின்றி பாதிப்படைந்த 900 குடும்பங்களுக்கு நிவாரணம் வழங்குக'

உடுவில்

கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் ஒன்றியத்தின் வலிகாமம்-தென்மேற்கு பகுதிகளின் கிளையினர் நிவாரணம் கோரி யாழ் அரசாங்க அதிபருக்கு விண்ணப்பித்துள்ளனர்.

நவாலி-சாவற்காடு-மானிப்பாய்-உயரப்புலம் ஆகிய பகுதியைச் சேர்ந்த மீனவர்கள் பலர் தமது ஒன்றியத்தினூடாக இவ்வேண்டுகோளை விடுத்துள்ளனர்.

இந்த அமைப்புகளுடன் இணைந்து செயற்படும் கிராமிய உடற்றொழில் சமூக அபிவிருத்தி ஒன்றியம் தமது அமைப்புகளின் அங்கம் வகிக்கும் சுமார் தொளாயிரம் குடும்பங்கள் தொழில் செய்ய முடியாது கஷ்டப்படுவதை அரசாங்க அதிபருக்குச் சுட்டிக்காட்டியுள்ளனர். -109

# உயிர்க்கொல்லி கொலரா உங்களையும் தாக்கலாம்

(யாழ்ப்பாணம்)

'உயிர்க்கொல்லி கொலரா, உங்களையும் தாக்கலாம்' என்ற தலைப்புடன் தமிழீழ விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவின் பொதுச் சுகாதாரப் பகுதியினர் அண்மையில் வெளியிட்ட பெரிய அளவிலான சுவரொட்டிகள் பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளது

கடந்த சில தினங்களாக எமது குடாநாட்டில் கொலரா வேகமாகப் பரவி வருவது தெரிந்ததே.

இந்நோய் மேலும் பரவவிடாமல் தடுப்பதனை நோக்குடன் விடுதலைப் புலிகளின் மருத்துவப் பிரிவினர் நடவடிக்கை எடுத்து வருவதாகத் தெரியவருகிறது இதன் முன்னோடியாகவே பெரியளவிலான சுவரொட்டிகள் பொதுமக்களின் பார்வைக்காக பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ளன. (162)

# புடவைக் கடையில் கூரை பிரித்து திருட்டு

(பருத்தித்துறை)

நள்ளிரவு வேளையில் புடவைக் கடையொன்றின் கூரையைப் பிரித்து உள் இறங்கிய திருடர்கள் கோஷ்டி அங்கிருந்து காஞ்சிபுரம் சேலைகள், மட்டின் சேட்கள், சாரவகைகள் உட்பட சுமார் 2 இலட்சம் ரூபா பெறுமதியான உடுபுடவைகளைக் கொள்ளையடித்துச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

பருத்தித்துறை நகரிலுள்ள புடவைக் கடையொன்றிலேயே இக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. இது சம்பந்தமாக கடை உரிமையாளர் பருத்தித்துறைத் தமிழீழ காவல்துறையில் புகார் செய்துள்ளார். (52ம)

# விறகுத் தேவைக்காக மரங்கள் நடுவோம்

(யாழ்ப்பாணம்)

பெரும் வளமற்ற எமது குடாநாட்டில் இருக்கின்ற சில மரங்களே இன்று எமக்கு சுத்தமான காற்றையும், மழையையும், நிழலையும் மற்றும் பிரயோசனங்களையும் தந்து எங்களை காத்து நிற்கின்றன.

இந்த மரங்களை வெட்டியழித்துப்போமானால் எமக்கு சுத்தமான காற்றோ, நிழலோ மற்றைய பிரயோசனங்களோ கிடைக்காமல் போய் விடும் ஒரு பெரிய மரத்தைத் தறித்தால் இதை ஈடுசெய்ய பல மரங்கள் நடவேண்டும் ஆயினும் அவை வளர்ந்துவர காலம் பிடிக்கும்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று மின்சாரம் எரிபொருள் மற்றும் சாதனங்கள் இல்லாத நிலையில் விறகு ஒன்றுதான் எரிபொருளாக மாறிவிட்டது. எதிர்காலத்தில் விறகுத் தேவை மரத்தேவை அதிகரிக்கும்போது தொடர்ந்தும் நாம் மரங்களைத் தறிப்போமானால் எமது பிரதேசம் மரமற்ற பாலைவனம் ஆகிவிடும்.

சராசரியாக ஒரு குடும்பத்திற்கு மாதாந்தம் 2 தூக்கு விறகு தேவைப்படுகின்றது. நாம் ஒவ்வொருவரும் எமது குடும்பத்திற்குத் தேவையான விறகைப் பெற முயற்சி எடுப்போமானால் நிச்சயமாக எமது எதிர்காலத் தேவை நிறைவு செய்யப்படும். எமது வளவுகளில் வெளியான தரிசான இடங்கள் தாராளமாக உள்ளன இந்த இடங்களில் வேலி ஓரங்களில் வருடா வருடம் 12 சவுக்கு மரங்களை நட்டால் 5 வருடத்தில் இந்த சவுக்கு மரம் எமது குடும்ப ஒருவருடத் தேவையை நிறைவு செய்ய போதுமானதாகும் அத்துடன் வளவுகளும் கவர்ச்சிகரமாகவும் இருக்கும்.

இது மட்டுமல்ல வேலிக்காக மதில் அமைக்கவோ கிடுகுவேலி அடைக்கவோ வசதி குறைவான இன்றைய நிலையில் வேலிகளுக்கு நெருக்கமாக இப்பில் இப்பில நட்டு விடலாம். வருடா வருடம் ஒரு குறிப்பிட்ட உயரத்தில் இதை வெட்டி கால்நடை உணவும் விறகும் பெறலாம். என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வாந்திபேதி நாடகக்கூத்து

(ஆனைப்பந்தி)

யாழ். மாவட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் கல்விப் பகுதியினரால் வாந்திபேதி சம்பந்தமான நாடகக்கூத்து கடந்த வியாழக்கிழமை மாலை நீலகமக்கள் தங்கியுள்ள அரியாலை சாம்சன் குடியிருப்பில் நடாத்தப்பட்டது. (101)

## சுகாதார பரிசோதனை

(ஆனைப்பந்தி)

யாழ். நகரமடத்திலியங்கி வரும் புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் இம்மாதம் 15-ம் திகதி வெள்ளிக்கிழமை மாணவர் சுகாதாரப் பரிசோதனை நடாத்தப்படவுள்ளது. (101)

**மணிவாக்கு**

மென்மை பயனளிக்காதபோது கண்டிப்பும் கடுமையும் மிகு மதிக்கப்படலாம்.

— பிஜேர்னெர்னேக்

# சகல இனங்களின் நலன் பேணப்பட்டு இலங்கையின் இனப் பிரச்னை தீர்க்கப் படவேண்டும் - அமெரிக்க தூதுவர்

(கொழும்பு)

இலங்கையில் சகல இனங்களின் நலன்களும் பேணப்பட்டு இனப்பிரச்னை தீர்க்கப்பட வேண்டுமென இறிலங்காவிற்கான அமெரிக்கத் தூதுவர் கூறியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவரான பேரிஸ்டசிஸிகவர் அண்மையில் அம்பாறை - கல்முனை பாடசாலைசென்றில் இடம் பெற்ற வைபவம் ஒன்றில் உரையாற்றும்போது இவ்வாறு கூறினார்.

அவர் காரைதீவு, சம்மாந்துறை, வீரமுனை ஆகிய பகுதிகளுக்குச் சென்று தமிழ் மக்களின் நிலைமைப் பார்வையிட்டார்.

தமிழ் அகதிகள் பாரபட்சமாக நடத்தப்படுவதை அவர் சுட்டிக்காட்டினார். -ரி

## நமது நோக்கு

### நீதி தூங்கவில்லை!

வடமேல் மாகாண சபைக்கும் தென்மாகாண சபைக்கும் ஐ. தே. க. வை சேர்ந்தவர்கள் முதலமைச்சர்களாக நியமிக்கப்பட்டது சட்டவிரோதமானது என மேன் முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது!

இந்த ஆண்டு மேமாதம் இறிலங்காவில் மாகாண சபைத் தேர்தல்கள் நடைபெற்றன

மேற்படி இரு மாகாணங்களிலும் சுதந்திரக் கட்சியைப் பிரதான அங்கமாகக் கொண்ட மக்கள் பொது முன்னணியும், ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியும் இணைந்து கூட்டு மாகாண ஆட்சியை அமைக்க முயற்சி செய்தன.

ஆனால், பெரும்பான்மை பலத்தைப் பெறமுடியாத ஐ- தே. க. வினர் முதலமைச்சர்களாக நியமனம் பெற்றனர்!

இது ஜனநாயக நடைமுறைகளுக்கு விரோதமானது; நீதியற்றது!

எதிர்க்கட்சிகள் தமது பலத்த எதிர்ப்பைத் தெரிவித்தும் அரசு அசைய வில்லை

எனவே இதனை ஆட்சேபித்து இரு முன்னணிகளும் நீதிமன்றத்தில் மனுக்கள் தாக்கல் செய்தன.

இதனிடையே, காமினி குழுவினரை அரசாங்கத்தோடு இணைக்க முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால் முயற்சிகள் தோல்வியில் முடிந்தன.

இந்தநிலையில் நியமனங்கள் சட்டவிரோதமானது என்ற தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அதுமாத்திரமல்ல, முதலமைச்சர்கள் பதவிக்குப் புதியவர்களை நியமிக்கும்படியும் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது.

பெரும்பான்மை பலம் இல்லாதிருந்தும், இரு மாகாண சபைகளைத் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க அரசு செய்த சூழ்ச்சி அம்பலமாகிவிட்டதாக பி. பி. ஸி. செய்தி நிறுவனம் கருத்துத் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசு பற்றி, அதன் ஜனநாயகச் செயற்பாடுகளின் இலட்சணம் பற்றி உலகம் அறிந்து கொள்ள நல்ல வாய்ப்பாகி விட்டது.

இதேவேளை இலங்கையில் இனப்பிரச்னை இல்லை எனவும், ஜனநாயகத்தைச் சீர்குலைக்க சில செய்யும் பயங்கரவாதம் எனவும் அரசு செய்துவரும் பிரசாரம் பற்றி உலகத்தவர் உய்த்துணரவும் நல்ல வாய்ப்பு ஏற்பட்டுவிட்டது.

ஐந்து நட்சத்திர ஜனநாயகம் இங்கு நிலவுகின்றது என ஜே. ஆர். தம்பட்டமடித்துக்கொண்டிருந்தார்

அவரின் வாரிசுகள் எவ்வாறு ஜனநாயகத்தைப் பேணுகிறார்கள் என்பது அம்பலமாகியுள்ளது!

# இந்திய புலிகள் யுத்தம் ஆரம்பித்து நேற்றுடன் 6 ஆண்டு பூர்த்தி

(யாழ்ப்பாணம்)

இந்திய - புலிகள் யுத்தம் ஆரம்பித்து நேற்றுடன் ஆறுவது ஆண்டு பூர்த்தியாகியுள்ளது முன்னாள் இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தியும் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் செய்துகொண்ட ஒப்பந்தத்தின் பின் இந்திய இராணுவம் அமைதிப்படை என்ற பெயரில் தமிழீழத்தை ஆக்கிரமித்தது.

600 படை முகாம்களை அமைத்துத் தங்கியிருந்த இந்தியப்படை சிறிலங்கா அரசுக்கு ஆதரவாக நடந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் மக்களுக்கும் துரோகம் இழைத்தது.

தொடர்ந்து தமிழீழ மக்கள் மீது இந்தியாவினால் போர் தொடுக்கப்பட்டது. 1987 அக்டோபர் 10-இல் தொடங்கிய இந்திய-புலிகள் போரில் ஆறாயிரத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டனர் 573 விடுதலைப் புலிகள் வீரச்சாவைத் தழுவிக்கொண்டனர்

இந்திய அரசின் அறிக்கையின்படி 1,165 இந்திய இராணுவத்தினர் கொல்லப்பட்டனர். இந்த யுத்தம் மூலம் இந்திய அரசின் முகத்திரை அம்பலப்படுத்தப்பட்டது. (சி)

# ★ வடக்கு, கிழக்கு குழந்தைகளுக்கான வெளிநாட்டு உதவிப்பொருள் தென்பகுதியில் விநியோகம்

(கொழும்பு)

வடக்கிலும் கிழக்கிலும் காணப்படும் போர்ச் சூழ்நிலையில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு வெளிநாட்டு அரசு சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் செல்வந்தர்கள் வழங்கிய உதவிப் பொருள்கள் தென்பகுதியிலுள்ள குழந்தைகளுக்கு வழங்கப்படுகிறது வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த உதவிப் பொருட்களில் ஒரு குறிக்கப்பட்ட தொகை நேற்று பம்பலப்பிட்டியிலுள்ள பௌத்த விகாரையொன்றில் வைக்கப்பட்டு குறிப்பிட்ட குழந்தைகளுக்கு வழங்கப்பட்டன.

நூறு சிறுவர்களுக்கு புலமைப் பரிசில் நிதியும் மற்றும் பாடசாலை உபகரணங்களும் வழங்கப்பட்டன. இந்த வைபவத்தில் பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஹமில்டன் வனசிங்கா பிரதம விருந்தினராக கலந்துகொண்டு இந்த அன்பளிப்புகளை வழங்கினார். (ரி)

## இராசிபலன்

11-10-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு புரட்டாதி 25)

ஏகாதசி பி. இ. 3-11 வரை ஆயிலியம் பி. ப- 4-09 வரை இராகுகாலம் காலை 7-32 முதல் 9-02 வரை சுபநேரம் நண்பகல் 12-02 முதல் 1-32 வரை.

மேடம்: முரண்பாடு, தொழில் நஷ்டம், பிறர்குரோதம்.

இடபம்: புத்தி சாதுரியம், எதிர்பார்த்தலாபம், தெய்வீக செலவு.

மிதுனம்: குடும்ப கவலை, தொழில் பகை, கடன்படல்.

கடகம்: வயோதிபர் உபதேசம், மனக்களிப்பு, புத்திரர் பெருமை

சிம்மம்: உடல்நிலைச்சோர்வு ஏமாற்றம், வெளியார் துரோகம்.

கன்னி: காரிய அனுகூலம். தொழில் முன்னேற்றம், பணவரவு.

துலாம்: திடீர் லாபம், தொழில் முதலீடு, விருந்தினர் வருகை.

விருச்சிகம்: வீண்குழப்பம். இனசனப்பகை, மாமனார் கையீடு.

தனுசு: பணியாள் வெறுப்பு குடும்ப தொல்லை, தொழில் இக்கல்.

மகரம்: சுபகாரியம், நண்பர் உதவி, இனியசம்பாஷணை

கும்பம்: அறிஞர் சந்திப்பு, பொதுச்சேவை, வாக்குவன்மை

மீனம்: சளித் தொல்லை, பயணநற்செயல், அதிகாரிகள் சினம்.

— ஜோஸ்யர்.

## குவைத்திலிருந்து திரும்பிய இலங்கையருக்கு 50 சதவீத நட்டஈடு

(கொழும்பு)

வளைகுடா யுத்தம் காரணமாக குவைத்திலிருந்து நாடு திரும்பிய இலங்கையர்களுக்கு ஐம்பது சதவீதநட்டஈடு வழங்கப்படும்.

ஜெனீவாவில் செயற்படும் நட்டஈட்டு ஆணைக்குழு இதற்கான வாக்குறுதியை அளித்துள்ளது.

இந்த நட்டஈட்டுப் பணத்தின் முதலாவது தொகை அடுத்த ஆண்டின் முதல் ஆறு மாத காலத்துள் வழங்கப்படும். இதற்கான நிதியும் விரைவில் கிடைக்கும் என்றும் உள்நாட்டலுவல்கள் மாகாண சபைகள் அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

சமீபத்தில் ஜெனிவாவிற்கு தான் விஜயம் செய்தபோது நட்டஈட்டு ஆணைக்குழு நிறைவேற்றுச் செயலாளர் இந்த உறுதிமொழியை வழங்கியதாக அவர் கூறினார். -162-ரி

## சகாய விலையில் பொருட்கள்

(பண்டத்தரிப்பு)

மானிப்பாயில் புதிதாகத் திறக்கப்பட்ட வர்த்தகத் திணைக்கள விற்பனை நிலையத்தில் சகாய விலையில் பொருட்கள் விற்கப்படுகிறது.

இங்கு லக்ஸ்பிறே பால்மா (400 கிறாம்) பக்கட் ஒன்று 60 ரூபா வீதம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. —72

## ஆசிரியர் தினம்

(யாழ்ப்பாணம்)

சைவ. டி. கலைவாணி வித்தியாலய ஆசிரியர் தினம் மேற்படி பாடசாலை அபிவிருத்திச் சங்க தலைவர் திரு சந்திரஞானமுத்து தலைமையில் நடைபெற்றது.

பாடசாலையின் பழைய மாணவர்களான திரு. க. இராசலிங்கம், செல்வன் இ. நிஷாகரன், செல்வி க. சாந்தி ஆகியோர் ஆசிரியர்களை கௌரவித்து உரையாற்றினார்கள். (ரி)

## சிரித்திரன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

"சிரித்திரன்" ஆடி-ஆவணி இதழ் வெளிவந்துள்ளது. இந்த இதழில் வழமையான அம்சங்களோடு மெயில் வாகனத்தார் மனோரதம் என்ற புதிய பகுதியும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது இதில் ஈழநாடு முன்னாள் ஆசிரியர் கே. பி. ஹரன் அவர்களின் மூலிகைகள் சம்பந்தமான கருத்துக்களும், நினைவுகளும் இடம் பெற்றுள்ளன சிறுகதைப் போட்டியில் முதலாம் இடம் பெற்றுள்ள ஈழமுத்துவின் 'கவிஞனின் மகன்' என்ற கதையும், சீலச் செல்வர் பிறமன் என்ற கட்டுரையும், கவிதைகளும் மற்றும் பல அம்சங்களோடு மலர்ந்துள்ளது. (ம-ரி)

## இன்று

(ஆனைப்பந்தி)

புங்குடுதீவு-நயினாதீவு பலநோக்குக்கூட்டுறவுச் சங்க பாவனையாளர்களுக்குரிய செப்ரெம்பர் மாத நிவாரண உலர் உணவுப் பொருட்கள் இன்று 11ம் திகதி திங்கட்கிழமை முதல் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்படும். (101)

0 0

(உடுவில்)

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி வருடாந்த பரிசளிப்பு விழா இன்று 11ம் திகதி திங்கட்கிழமை காலை ஒன்பது மணிக்கு அதிபர் நா. நந்தசாமி தலைமையில் நடைபெறும் வடமாநில கல்விப்பணிப்பாளர் திரு. இரா. சுந்தரலிங்கம் இவ்விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார். (109)

0 0

(உடுவில்)

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை பரிசுநாள் விழா இன்று 11ம் திகதி திங்கட்கிழமை பகல் 1-30 மணிக்கு அதிபர் க. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும். முதன்மை விருந்தினராக பிரதிக்கல்விப்பணிப்பாளர் திரு த. துரைசிங்கம் கலந்து கொள்வார். (109)

0 0 0

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டம் நடாத்தும் ஆசிரியர் கற்பித்தல் உபகரண கண்காட்சி" இன்று 11ம் திகதி திங்கட்கிழமையன்று மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையில் நடைபெறவுள்ளது. (72-139)

0 0

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் நடாத்தப்படவுள்ள ஒன்பது மாதகால விவசாயப் பயிற்சி நெறி இன்று 11ம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இப்பயிற்சி நெறிக்கென தெரிவு செய்யப்பட்டவர்கள் இன்றைய தினம் காலை 8-30 மணிக்கு திருநெல்வேலி மாவட்ட விவசாயப் பயிற்சி நிறுவனத்திற்கு வருது சமுகம் கொடுக்கும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

0 0

(யாழ்ப்பாணம்)

புதிய பிரதேசக் கல்விச் செயலகங்களின் செயற்பாடுகள் சம்பந்தமான கலந்துரையாடுவதற்கானகூட்டம் ஒன்று யாழ் கல்வித் திணைக்கள மாநாட்டு மண்டபத்தில் இன்று 11ம் திகதி திங்கட்கிழமை பி. ப. 1-30க்கு நடைபெறும். இக்கூட்டத்திற்கு திணைக்களத்திலும், கோட்டக்கல்வி அலுவலகங்களிலும் கடமை புரியும் துறை சார்ந்த உதவி/பிரதி கல்விப் பணிப்பாளர்கள் உட்பட பிரதிக்கல்விப்பாளர்களும், உதவிக்கல்விப் பணிப்பாளர்களும் கோட்டப் பணிமனைகளில் இணைக்கப்பட்டுள்ள அதிபர்களும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றனர்.

## தென் கொரியாவில் 150 பயணிகள் கடலில் பலி

(சியோல்)

தென் கொரியாவில் கடலில் பயணம் செய்த படகு ஒன்று நேற்று கவிழ்ந்ததில் குறைந்தது 150 பேர் வரையில் உயிரிழந்திருக்கலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

தமது விடுமுறையை கழிப்பதற்காக வருகை தந்த உல்லாசப் பயணிகளே இப்படகில் பயணம் செய்ததாகவும் இவர்களில் 68 பயணிகள் காப்பாற்றப்பட்டதாகவும் தெரிய வருகிறது. (க-ஸ)

## நீர் இன்றேல் வளம் ஏது

# இலங்கைப் படையிடமிருந்து தமிழகமீனவரைகாப்பாற்றுக

## கருணாநிதி கோரிக்கை

(சென்னை)

இலங்கைக் கடற்படையின் தாக்குதல்களிலிருந்து தமிழக மீனவர்களைக் காப்பாற்றுவதற்கு உடன் நடவடிக்கை களை மேற்கொள்ளுமாறு தி.மு.க. தலைவர் திரு மு.கருணாநிதி, மத்திய-மாநில அரசுகளை வற்புறுத்தியுள்ளார்.

சென்னையில் அவர் வெளியிட்ட அறிக்கையில், இராமேஸ்வரம், நாகபட்டினம், தொண்டி கடற் பகுதிகளில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு, இலங்கைக் கடற்படையினர் தொடர்ந்தும் கொடுமைகள் செய்துவருவதாகவும் தெரிவித்தார்.

தமிழக மீனவர்களைப் பாதுகாப்பதற்குப் போதிய நடவடிக்கை எடுக்குமாறு மத்திய அரசைத் தூண்டுவதற்கும் தமிழக அரசு தவறிவிட்டதாகவும் அவர் கூறினார். -இ-சி

# அடுத்த 6 மாத காலத்தினுள் கிழக்கில் சிவில் நிர்வாகமாம்

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தில் அடுத்த 6 மாத காலத்திற்குள் சிவில் நிர்வாகத்தை முழுமையாக ஏற்படுத்தமுடியும் எனப் பாதுகாப்பு ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவர் ஜெனரல் ஹமில்டன் வணிகசூரிய தம்பிக்கை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்: நாட்டைப் பாதுகாப்பதில் பெரும்பான்மைச் சமூகத்தவர் கடமையாற்றவேண்டிய அதேவேளையில், சிறுபான்மையினரின் நலன்களைப் பாதுகாப்பதில், பெரும்பான்மையினர் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டும்.

இந்த வகையில் வடக்கு-கிழக்கில், இராணுவத்தினரும், இராணுவ அதிகாரிகளும் தொடர்ந்தும் செயற்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த வருட இறுதிக்குள் கிழக்கு மாகாணம் தமது பூரண கட்டுப்பாட்டுக்குள் வருமெனவும், அடுத்த வருட முற்பகுதியில் கிழக்கில் பூரண சிவில் நிர்வாகம் ஏற்படுத்தப் படுமெனவும் கடந்த மாதம் ஜெனரல் ஹமில்டன் கூறியதும் இங்கு குறிப்பிடத்தக்கது. -க-சி

# கிளாலி ஊடாக பெருமளவு பயணிகள்

(யாழ்ப்பாணம்)

கிளாலி படகுசேவை கடந்த சில தினங்களுக்குப் பின் நேற்று மீண்டும் ஆரம்பமான போது கிளாலி ஊடாக பயணம் செய்வதற்காக பெருமளவு பயணிகள் சென்றிருந்தனர்.

நேற்றுக் காலை யாழ். மத்திய பஸ் நிலையத்தில் ஆயிரக்கணக்கான பயணிகள் தமது பிரயாணப் பொதிகளுடன் கூட்டம்கூட்டமாக நின்றதைக் காணக்கூடியதாக இருந்தது.

கிளாலியை நோக்கிப் புறப்படுவதற்காக பயணிகள் சிற்றூர்திகளும் வழமைக்குமாறாக பஸ் நிலையத்தில் ஏராளமாக நிறுத்தப்பட்டிருந்தன. பயணிகள் முண்டியடித்துக் கொண்டு நீண்ட கியூவில் நின்று டிக்கெற் பெறுவதையும் காணக் கூடியதாக இருந்தது. (162-சி)

# கொலைச் சதியிலிருந்து அரபாத் தப்பினார்

(லண்டன்)

பாலஸ்தீன விடுதலை இயக்கத் தலைவர் ஜாஸிர் அரபாத்தை கொலை செய்யச் சதி முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் ஆனால் அம்முயற்சி வெற்றியளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

பாலஸ்தீன-இஸ்ரேல் ஒப்பந்தத்தை எதிர்க்கும் பழமைவாத பாலஸ்தீனியர்களே இக்கொலை முயற்சியில் ஈடுபட்டதையடுத்து ஜாஸிர் அரபாத்தின் பாதுகாப்பு மேலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இக்கொலை முயற்சிக் குற்றச்சாட்டை பாலஸ்தீன விடுதலை அமைப்பு அதிகாரிகள் முற்றாக மறுத்துள்ளதாகவும் தெரியவருகிறது. (க-சி)

### 58 தமிழ்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பில் நிலவும் பலத்த பாதுகாப்பினால் கொலையாளிகளின் முயற்சி கைகூடாது போயிருக்கலாமெனவும் புலனாய்வுத்துறையினர் கூறியுள்ளனர். (ம-சி)

---

## மரண அறிவித்தல்

புங்குடுதீவு

### சின்னப்பா சண்முகலிங்கம்

புங்குடுதீவு 10-ம் வட்டாரத்தை சேர்ந்த சின்னப்பா சண்முகலிங்கம் 09 - 10 - 93 அன்று கொழும்பில் காலமானார். இவர் சின்னப்பா பூரணம் ஆகியோர்களின் அன்பு மகனும், நாகநாதி இராசம்மாவின் அன்பு மருமகனும், விஜயலட்சுமியின் அன்புக்கணவரும் தீபா, திலீபன், பிரதீபன் ஆகியோரின் தந்தையுமாவார். பூதவுடல் 10-10-93 நேற்று கொழும்பு கனத்தை மயானத்தில் மாலை 5-00 மணிக்கு அடக்கம் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

தகவல்:
மனைவி விஜயலட்சுமியும்,
பிள்ளைகளும்.

இல: 74/3 அரசடி வீதி,
யாழ்ப்பாணம். (சி-515)

---

### யாழ். குடாவை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படுகிறது.

படையினர் தமது புதிய தாக்குதலுக்கெனத் தீவுப் பகுதியில் படையினரையும், யுத்த தளபாடங்களையும், கவசவாகனங்களையும் நகர்த்தி வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன. -சி

### மாதகல்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினரை நோக்கி தாக்குதலை நடத்தியதாகவும் கடற்படையினரும் திருப்பித் தாக்கியதாகவும் தெரிவிக்கப் பட்டது. எனினும் இம்மோதலில் ஏற்பட்ட சேதவிபரங்கள் பற்றி எதுவும் இதுவரையில் கிடைக்கவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டது. (க-சி)

### இலங்கை கடற்படை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இலங்கை கடற்படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டது குறித்து வெளியிட்ட கண்டன அறிக்கையில் தெரிவித்துள்ளது.

தொடர்ந்தும் தமிழக மீனவர்கள் தாக்கப்படுவதை நிறுத்தி அவர்களுக்கு தகுந்த பாதுகாப்பு வழங்கவேண்டுமெனவும் அக்கட்சி கோரியுள்ளது. (சி)

### இல.-இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சுட்டுக் கொல்லப்பட்டது குறித்து, பி. ஜே. பி யின் தமிழ்நாடு பிரிவு உப தலைவர் ஏ. பெரியசாமி மேலும் கூறுகையில்:

கடலில் மீன் பிடிக்கச் செல்லும் மீனவர்களுக்கு கடல் எல்லைகள் பற்றிச் சரியாகத் தெரியாததால், இந்தியக் கடலோரக் காவற்படை அவர்களுக்குச் சரியாக வழிகாட்டி உதவவேண்டும் என்றார். -சி

### இலங்கைப்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தடவைகள் எச்சரித்தும் அதனை இலங்கை படையினர் உதாசீனம் செய்து வருவது இந்தியாவிற்கு பெரும் சீற்றத்தை தோற்றுவித்துள்ளதாம்.

இந்திய மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்கினால் இந்தியப் படை தகுந்த பதிலடி கொடுக்குமென அண்மையில் இந்திய கடற்படையின் கிழக்கு பிராந்திய தளபதி எச்சரித்திருந்தார். எனினும் அவ்வெச்சரிக்கையும் புறக்கணிக்கப்பட்டதால் இனிஇவ்வாறான சம்பவம் ஏதும் நிகழ்ந்தால் இலங்கை படைமீது இந்தியப் படைகள் தாக்குதல் தொடுக்கலாமெனவும் கூறப்படுகிறது. (சி)

# 2-ம் லெப். மாலதியின் 6-ம் நினைவு தினம் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

முதல் களப்பலியான பெண் போராளியான 2ம் லெப். மாலதியின் நினைவு நாள் நேற்று தமிழீழத்தின் பல பகுதிகளிலும் வெகுசிறப்பாக நினைவு கூரப்பட்டது.

2ம் லெப் மாலதி வீரச்சாவடைந்த கோப்பாய் வெளியில் நேற்று மாலை அஞ்சலிநிகழ்ச்சிகளும், நினைவுக் கூட்டமும் இடம்பெற்றது. விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்கள் பலர் இங்கு உரையாற்றினர்.

இதேபோன்று கிளிநொச்சி, மன்னார், முல்லைத்தீவு, வவுனியா பகுதியிலும் அஞ்சலி நிகழ்ச்சியும் நினைவஞ்சலிக் கூட்டமும் நடைபெற்றன. (சி)

# கரடி கடித்து, சிப்பாய் காயம்

(திருமலை)

திருமலை காட்டுப்பகுதியில் தேடுதல் நடவடிக்கையில் படையினர் ஈடுபட்டபோது சிப்பாய் ஒருவரை கரடி தாக்கி கடித்துக் காயப்படுத்தியுள்ளதாம்.

படுகாயமடைந்த இச்சிப்பாய் தற்போது சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேவேளை திருமலைக்காட்டுப் பகுதியில் படையினருக்கும் புலிகளுக்குமிடையில் மோதல் இடம்பெற்றதாகவும் கூறப் படுகிறது. (சி)

# கொர்பச்சேவ் மீண்டும் அரசியலில்?

(மொஸ்கோ)

ரஷ்யாவில் தற்போது ஏற்பட்டுள்ள அரசியல் நெருக்கடியைத் தீர்க்க தமது சேவைகள் தேவைப்படும் பட்சத்தில் தாம் மீண்டும் அரசியலுக்கு திரும்பத் தயாரென முன்னாள் சோவியத் அதிபர் திரு. மிகையில் கொர்பச்சேவ் தெரிவித்துள்ளார்.

ரஷ்ய அதிபர் பொரிஸ் ஜெல்சினுக்கும் ரஷ்யபாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் இடையில் அண்மையில் ஏற்பட்ட பதற்றநிலையையடுத்தே முன்னாள் சோவியத் அதிபர் மேற்கண்ட அறிவிப்பைவிடுத்துள்ளார்.

திரு கொர்பச்சேவ் மீண்டும் அரசியலுக்கு வருவதற்கு பலத்தஆதரவு இருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (க-சி)

# பி.ஜே.பி. — அ.தி.மு.க. கூட்டணி இல்லை

(சென்னை)

பாரதீய ஜனதாக் கட்சி, அ. தி. மு. க.வுடன் ஒரு போதும் கூட்டு வைத்துக் கொள்ளாது என்றும், தனித்து நின்றே தேர்தலில் போட்டியிடுமென்றும் மேற்படி கட்சியின் பொதுச்செயலாளர் எம். செல்வசாமி தெரிவித்துள்ளார்.

சென்னையில் நேற்றுப் பத்திரிகையாளர் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதேவேளையில் பாரதீய ஜனதாக் கட்சிக்கும் அ.தி.மு.கவுக்கும் இடையே உறவு ஏற்படும் வாய்ப்பிருப்பதாக எதிர்க்கட்சிகள் கூறிவருகின்றன. (க-சி)

### கிளாலி மிதிவெடியில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

(வயது 25) கொட்டடி, இராசரத்தினம் இமிதா வின்சன் (வயது 20) உடுவில், சந்திரயா சிவநாதன் (வயது 30) உடுவில் இவர் இடது முழங்காலுக்குகீழ் துண்டிக்கப்பட்டு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (சி)

### மத்திய அரசு மீது

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இதுகுறித்து முதல்வர் ஜெயலலிதா பிரதமர் நரசிம்மராவுக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

தமிழக மீனவர்கள் சர்வதேசக் கடல் எல்லையைக் கடந்துவிட்டார்கள் என்று கூறி, தமிழக மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் சுட்டுக் கொல்வதைத் தடுக்க இலங்கைப் படையினருக்கு, அந்த நாட்டு அரசு உத்தரவிடச் செய்யவேண்டும் எனவும், இது குறித்து மத்திய அரசு இலங்கைக்கு எடுத்துக் கூறவேண்டும் எனவும் அவர் பிரதமர் நரசிம்மராவைக் கேட்டுள்ளார். -இ-சி

### கிளாலி கரையோரத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ருந்த பயணிகள் யாவரும் பாதுகாப்பிடம்நோக்கி ஓடினரென்றும் பலர் பதற்றமடைந்து செய்வதறியாது திகைத்து நின்றனர்என்றும் தெரிவிக்கப் படுகிறது.

மேலும் கிளாலியில் படையினர் தரித்து நின்று சேதங்கள் பல விளைவித்த பின் அப்பகுதியிலிருந்து வரபலானதையடுத்து நடைபெற்ற முதலாவது கிளாலிப் பயணம் இதுவென்பதால் பயணிகள் மத்தியில் பதற்றம் அதிகரித்துக் காணப்பட்டது.

எனினும் பயணிகள் மீது ஹெலிகொப்ரலிலிருந்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின் சேதவிபரங்கள் எவையும் கிடைக்கவில்லை. (க-சி)

### தமிழக மீனவர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழந்த, காயமடைந்தவர்களுக்கு நஷ்டஈடு வழங்க வேண்டும் இம்மாதிரிச்சம்பவங்கள் எதிர்காலத்தில் திரும்பவும் ஏற்படாமல் இலங்கை அரசு பார்த்துக் கொள்ளவேண்டும்.

இந்திய மீனவர்கள் கச்சதீவுப் பகுதியில் மீன்பிடிக்கச் செல்லும் உரிமை இருநாடுகளிற்குமிடையிலான நல்லுறவின் அடிப்படையில் இலங்கை அரசு ஏற்றுக்கொண்டபின்பும் இச்சம்பவம் நடைபெற்றுள்ளதாகவும் இந்திய தூதர் சுட்டிக்காட்டியுள்ளார். (சி)

### காமினி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்துள்ளார்.

ஆனால் அண்மையில் பொதுசன ஐக்கிய முன்னணியுடன் இணைந்து ஜி. எம். பிரேமச்சந்திராவின் குழுவினர்தான் முதலமைச்சர் பதவியை ஏற்றுள்ளனர் என்றும், தான் ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவை சந்தித்துக் கலந்துரையாடியதாகவும் திரு. சமிலு மேலும் தெரிவித்தார்.

இதேவேளை எதிர்க்கட்சிகள் சிறிமானி அத்துலத்முதலியை அரசியலில் பிரவேசிப்பதற்கு உற்சாகம் கொடுத்து வருகின்றன. அப்படி அரசியலில் பிரவேசிக்க சிறிமானி விரும்பினால், கட்சியின் தலைவர் காமினி திசநாயக்காவுடன் கலந்துரையாடலாம் என்றும் கட்சி வட்டாரங்கள் கூறின.

---

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1993-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 11-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, Sri Lanka under Licenee Number B/10 336/B: